# கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை

**மானியக் கோரிக்கை எண். 17**

# கைத்தறி மற்றும் துணிநூல்

அறிவிப்புகள்
2021-2022


**ஆர்.காந்தி**

கைத்தறி மற்றும் துணிநூல் துறை
அமைச்சர்

## 1. கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு அரசால் வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தள்ளுபடி மானியத்திற்கு கூடுதலாக ரூபாய் 160.11 கோடி வழங்கப்படும்

31.03.2021–ஆம் தேதியில் நிலுவையாக உள்ள தள்ளுபடி மானியத் தொகை ரூபாய் 160.11 கோடியினை சிறப்பினமாக ஒரே தவணையில் தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸிற்கு வழங்கிட, கூடுதலாக ரூ.160.11 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 2. ஆண்டுக்கு ரூபாய் 21 கோடி கூடுதல் செலவினத்தில், கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்ட மானியமாக வழங்கப்படும் தொகை ரூபாய் 4 இலட்சமாக உயர்த்தி, நகர்ப்புற நெசவாளர்களுக்கும் விரிவுபடுத்தப்படும்

கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்ட மானியமாக வழங்கப்படும் தொகை ரூபாய் 4 இலட்சமாக உயர்த்தி வழங்கிட, ஆண்டு ஒன்றிற்கு, கிராமப்புறத்தில் 500 வீடுகளும், நகர்ப்புறத்தில் 500 வீடுகளும் கட்டுவதற்கு கூடுதலாக ஆண்டுக்கு ரூபாய் 21 கோடி நிதி வழங்கப்படும்.



## 3. ரூபாய் 6 கோடி திட்ட மதிப்பீட்டில் திண்டுக்கல் மாவட்டம், சின்னாளப்பட்டியில் சாயக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும்

திண்டுக்கல் மாவட்டம், சின்னாளப் பட்டியில் நெசவாளர்கள் பயன் பெறும் வகையிலும் சுற்றுச் சூழல் பாதிப்பு ஏற்படாத வகையிலும், ஒருங்கிணைந்த பதனிடும் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதியுடன், ரூபாய் 6 கோடி திட்ட மதிப்பீட்டில் சாயக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும்.

## 4. தமிழ்நாட்டின் கைத்தறி இரகங்களின் பாரம்பரியம் மற்றும் கைத்திறனை பாதுகாக்கும் வகையில் ரூபாய் 5 கோடி செலவில் 'கைத்தறி அருங்காட்சியகம்' அமைக்கப்படும்

கைத்தறி நெசவில் ஆண்டாண்டு காலமாக உள்ள பாரம்பரியம் மற்றும் கலைநயத்தினை பாதுகாக்கவும், வருங்கால புதிய தலைமுறையினர் நெசவுத் தொழிலின் மேன்மை, கைத்தறி நெசவாளர்களின் திறன், தமிழ்நாட்டிலுள்ள கலைநயமிக்க கைத்தறி இரகங்களின் சிறப்பினை அறிந்து கொள்ளவும், கைத்தறி இரகங்களின் வடிவமைப்பு மற்றும் வண்ணங்களில் புதிய உத்தியினை பயன்படுத்தி உற்பத்தி மேற்கொள்ளவும், கைத்தறி அருங்காட்சியகம் ரூபாய் 5 கோடி செலவில் அமைக்கப்படும்.



## 5. தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையின் உற்பத்தி மற்றும் வியாபாரத் திறனை மேம்படுத்த ரூபாய் 4 கோடி மதிப்பில் தொடர் சலவை இயந்திரம் நிறுவப்படும்

ஈரோட்டில் அமைந்துள்ள தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை வெளுத்தல், சாயமிடல், மெருகேற்றல் மற்றும் அச்சிடல் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வாலை மாதம் ஒன்றிற்கு 23 இலட்சம் மீட்டர் துணிகளை பதனிடும் திறன் பெற்றுள்ளது. ஆலையின் உற்பத்தி மற்றும் வியாபாரத்திறனை மேலும் அதிகரிக்கும் பொருட்டு, ரூபாய் 4 கோடி மதிப்பில் தொடர் சலவை இயந்திரம் (Continuous Bleaching Range) நிறுவப்படும்.

**6. கைத்தறி நெசவாளர்களுக்கு அடிப்படை கூலியில் 10% உயர்வும் அகவிலைப்படியில் 10% உயர்வும் வழங்கப்படும்**

தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு 2015 ஆம் ஆண்டுக்கு பின்னர் அடிப்படை கூலி உயர்வு வழங்கப்படாததை கருத்தில் கொண்டும், நெசவாளர்களின் வருவாயை அதிகரித்து வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டும் கைத்தறி நெசவாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் அடிப்படை கூலியில் 10% உயர்வும் அகவிலைப்படியில் 10% உயர்வும் வழங்கப்படும்.

இதன் மூலம் சுமார் 1 இலட்சம் கைத்தறி நெசவாளர்கள் பயன் பெறுவர்.



**7. ரூபாய் 3.67 கோடி கூடுதல் செலவினத்தில், வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி மற்றும் பெடல்தறி வேட்டி சேலை இரகங்களுக்கு தற்போது வழங்கப்படும் நெசவுக்கு முந்தைய பணிகளுக்கான கூலி உயர்த்தி வழங்கப்படும்**

வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி மற்றும் பெடல்தறி சேலை இரகங்களுக்கு, தற்போது வழங்கப்படும் நெசவுக்கு முந்தைய பணிகளுக்கான கூலி, ஒரு உருப்படிக்கு ரூபாய் 20.50 லிருந்து ரூபாய் 26.67 ஆக உயர்த்தியும் வேட்டி இரகங்களுக்கு ஒரு உருப்படிக்கு ரூபாய் 10.30 லிருந்து ரூபாய் 12.36 ஆக உயர்த்தியும் வழங்கப்படும். இதன் மூலம் அரசுக்கு ரூபாய் 3.67 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும்.

## 8. இலவச சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி மற்றும் பெடல்தறி கேஸ்மெண்ட் துணி இரகங்களுக்கு நெசவுக்கு முந்தைய பணிகளுக்கான கூலி உயர்த்தி வழங்கப்படும்

இலவச சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ், உற்பத்தி செய்யப்படும் கைத்தறி மற்றும் பெடல்தறி கேஸ்மெண்ட் துணி இரகங்களுக்கு நெசவுக்கு முந்தைய பணிகளுக்கான கூலி, ஒரு மீட்டருக்கு ரூபாய் 4.32 லிருந்து ரூபாய் 4.89 ஆக உயர்த்தியும், கைத்தறி டிரில் துணி இரகங்களுக்கு ஒரு மீட்டருக்கு ரூபாய் 3.81 லிருந்து ரூபாய் 4.69 ஆக உயர்த்தியும் வழங்கப்படும். இதன் மூலம் அரசுக்கு ரூபாய் 75 இலட்சம் கூடுதல் செலவினம் ஏற்படும்.



## 9. நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் பணிபுரியும் 1,033 நிரந்தரப் பணியாளர்களின் ஊதிய விகிதத்தினை சீரமைக்க ஊதிய நிர்ணயக் குழு அமைத்து சம்பள உயர்வு வழங்கப்படும்

தமிழ்நாட்டில் உள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் பணிபுரியும் நிரந்தரப் பணியாளர்களுக்கு 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊதிய விகிதம் நிர்ணயம் செய்யப்படுகிறது. தற்போது உயர்ந்து வரும் விலைவாசியினை கருத்தில் கொண்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் பணிபுரியும் 1,033 நிரந்தரப் பணியாளர்களின் ஊதிய விகிதத்தினை சீரமைக்க ஊதிய நிர்ணயக் குழு அமைத்து சம்பள உயர்வு வழங்கப்படும்.

**10. நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் 10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்து, சிறப்பு கால முறை ஊதியம் பெற்று வரும் 406 தற்காலிக பணியாளர்கள் பணிநிரந்தரம் செய்யப்படுவர்**

நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் 10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்து வரும் சிறப்பு கால முறை ஊதியம் பெறும் தற்காலிக பணியாளர்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் பணிநிரந்தரம் செய்யப்படும். இதன் மூலம் 246 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் பணிபுரிந்து வரும் 406 சிறப்பு கால முறை ஊதியம் பெற்று வரும் பணியாளர்கள் பயன் பெறுவர்.



**11. கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி இரகங்களில் கண்கவர் வடிவமைப்புகளை உருவாக்கி நெசவு செய்ய பயன்படும் மின்னணு ஜக்கார்டு இயந்திரங்கள் பராமரிப்பு சேவை மையம் ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டில் காஞ்சிபுரத்தில் அமைக்கப்படும்**

காஞ்சிபுரத்தில் உள்ள 22 பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் பயன்பெறும் வகையில் ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டில் மின்னணு ஜக்கார்டு இயந்திரங்கள் பராமரிப்பு சேவை மையம் அமைக்கப்படும்.

## 12. மாநில அளவிலான சிறந்த கைத்தறி நெசவாளர் விருது வழங்கும் திட்டத்தின்கீழ் பரிசுத் தொகை உயர்த்தி வழங்கப்படும்

மாநில அளவிலான சிறந்த கைத்தறி நெசவாளர் விருது வழங்கும் திட்டத்தின்கீழ், பட்டு மற்றும் பருத்தி இரகங்களில் புதுமையான வடிவமைப்புகளை உருவாக்கும் சிறந்த நெசவாளர்களுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக முறையே ரூபாய் 1 இலட்சம், ரூபாய் 75,000 மற்றும் ரூபாய் 50,000 வழங்கப்பட்டு வருவதை முறையே ரூபாய் 5 இலட்சம், ரூபாய் 3 இலட்சம் மற்றும் ரூபாய் 2 இலட்சம் ஆக பரிசுத்தொகை உயர்த்தி வழங்கப்படும். இதனால் அரசுக்கு ரூபாய் 15.50 இலட்சம் கூடுதல் செலவினம் ஏற்படும்.



## 13. தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள விற்பனை நிலைய விற்பனையாளர்களின் பணித்திறனை மேம்படுத்துவதற்கு ரூபாய் 35 இலட்சம் செலவில் விற்பனைத் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும்

தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள விற்பனை நிலைய விற்பனையாளர்களின் பணித்திறனை மேம்படுத்துவதற்கும், வாடிக்கையாளர்களை இன்முகத்தோடு வரவேற்று அவர்களின் விருப்பத்தினை அறிந்து அவர்கள் எதிர்பார்க்கும் இரகங்களை காட்சிப்படுத்தவும், விற்பனை செய்யப்படும் இரகங்கள் குறித்த சிறப்புகளை வாடிக்கையாளர்களுக்கு சரளமாக எடுத்துரைப்பது போன்ற விற்பனை யுத்திகளை மேம்படுத்துவதற்கு 350 விற்பனையாளர்களுக்கு ரூபாய் 35 இலட்சம் செலவில் விற்பனைத் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும்.

## 14. தமிழ்நாட்டில் இயங்கும் ஆறு கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரியும் 75 நிரந்தர பணியாளர்களுக்கு புதிய ஊதிய விகிதம் மாற்றியமைத்து வழங்கப்படும்

தமிழ்நாட்டில் இயங்கும் ஆறு கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரியும் 75 நிரந்தர பணியாளர்களுக்கு புதிய ஊதிய விகிதம் மாற்றியமைத்து வழங்கப்படும். இதனால் ஆண்டொன்றிக்கு ரூபாய் 42 இலட்சம் கூடுதலாக செலவினம் ஏற்படும்.



## 15. கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு அமல்படுத்த ஆலோசனைக்குழு அமைத்து ஊதிய உயர்வு வழங்கப்படும்

கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு அமல்படுத்த ஊதிய உயர்வு ஆலோசனைக் குழு அமைத்து ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு ஊதிய உயர்வு வழங்கப்படும்.

## 16. கைத்தறி நெசவாளர்களின் நல்வாழ்விற்காக 'ஆரோக்கிய நெசவாளர் நல்வாழ்வு மற்றும் காப்பீடுத் திட்டம்' செயல்படுத்தப்படும்

கைத்தறி நெசவு என்பது ஒரு குடும்பம் சார்ந்த தொழில். கைத்தறி நெசவாளர்கள் நாளொன்றுக்கு 16 மணி நேரம் வரை நெசவு தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். கைத்தறி நெசவாளர்களின் உடல் நலத்தை பாதுகாக்க அவர்கள் எதிர்கொள்ளும் ஆரோக்கிய குறைபாடுகளை வரும்முன் தடுப்பதற்கு நெசவாளர்களுக்கு 'யோகா' பயிற்சி வழங்கப்படும்.

நெசவுத் தொழிலில் பஞ்சு தூசுகளாலும், தறி அமைப்பினால் தொடர்ந்து அமர்ந்த நிலையில் நெசவு மேற்கொள்வதாலும் நெசவாளர்களுக்கு தொழில் சார்புடைய ஆரோக்கிய குறைபாடுகளான கண் பார்வை குறைதல், மூட்டு வலி, மூச்சு திணறல் மற்றும் சுவாச பிரச்சனை ஆகியன ஏற்படுகிறது.

கடந்த ஆண்டுகளில் நெசவாளர்களின் நலனை பாதுகாத்திட நல்வாழ்வு காப்பீடுத் திட்டத்தின் கீழ் புறநோயாளி மருத்துவ சிகிச்சை



வழங்கப்பட்டு வந்தது. இத்திட்டம் ஒன்றிய அரசினால் கைவிடப்பட்டுள்ளதால், நெசவாளர்கள் உடல்சார்ந்த புறநோயாளி மருத்துவ சிகிச்சை பெறுவதற்கு 'ஆரோக்கிய நெசவாளர் நல்வாழ்வு மற்றும் காப்பீடுத் திட்டம்' செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் கைத்தறி நெசவாளர்கள் பட்டியலிடப்பட்ட மருத்துவமனைகளில் பணம் செலுத்தாமல் மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம்.

## 17. கைத்தறி நெசவாளர்களுக்கு மின் வணிகத்திற்கான கணினி பயிற்சி வழங்கப்படும்

கைத்தறி நெசவாளர்களுக்கு வடிவமைப்புத் திறன் குறித்து பயிற்றுவித்து மின் வணிகம் மேற்கொள்ளுவதற்கு ஏதுவாக அவர்களுக்கு கணினி பயிற்சி அளிக்கப்படும். இது நெசவாளர்களுக்கு பல்வேறு வடிவமைப்பு நுணுக்கங்களைப் புரிந்துகொள்ளவும், அவ்வடிவமைப்புகளை நெசவில் பயன்படுத்தவும், உற்பத்தி செய்யப்பட்ட கைத்தறி இரகங்களை மின் வணிகம் செய்வதற்கும் பயனுள்ளதாக அமையும்.



## 18. கைத்தறி மற்றும் துணிநூல் துறை ஆணையரகத்தில் நெசவாளர் குறை தீர்க்கும் மையம் அமைக்கப்படும்

கைத்தறி நெசவாளர்களுக்கு சிறந்த சேவைகளை வழங்குவதற்காகவும், நெசவாளர்களின் குறைகளான வேலைவாய்ப்பு, கூலி, நலத்திட்டங்கள், நெசவாளர்களுக்கு துறை மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களில் சேர்ப்பது போன்றவற்றை மேம்படுத்தவும், அவர்கள், தங்களின் குறைகளை தெரிவிக்க ஏதுவாகவும், கைத்தறி மற்றும் துணிநூல் துறை ஆணையரகத்தில் குறை தீர்க்கும் மையம் அமைக்கப்படும். இதன் மூலம் நெசவாளர்கள் தங்கள் குறைகளை இந்த நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட முகமை அதிகாரியிடம் தெரிவித்து, உடனுக்குடன் தீர்வை சரியான நேரத்தில் பெற முடியும்.

## 19. கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு பஞ்சாலை கழகத்தில் மருத்துவம் சார்ந்த தொழில்நுட்ப ஜவுளிகள் உற்பத்தி செய்யப்படும்

ஜவுளித் துறையில் தொழில்நுட்ப ஜவுளிகள் என்பது புதிதாக உதயமாகி வளர்ந்து வரும் ஒரு பிரிவாகும். இது உள்ளூர் நுகர்வுக்கு மட்டுமின்றி ஏற்றுமதிக்கும் நிறைய வாய்ப்புகளை ஏற்படுத்தி உள்ளது. தொழில்நுட்ப ஜவுளிகள், பன்னிரண்டு பயன்பாட்டுப் பகுதிகளை மையமாக கொண்டுள்ளது. அதில் ஒரு பிரிவான மருத்துவம் சார்ந்த தொழில்நுட்பத்தின் (மெடிடெக்) கீழ், தமிழ்நாடு பஞ்சாலை கழகத்தில் புதிய இயந்திரங்கள் ரூபாய் 1 கோடி மதிப்பில் கொள்முதல் செய்து மருத்துவம் சார்ந்த தொழில்நுட்ப ஜவுளிகள் உற்பத்தி செய்யப்படும்.



## 20. வாடிக்கையாளர்கள் தங்கள் ரசனைக்கேற்ற சேலை வடிவமைப்புகளை தாங்களே வடிவமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்

வாடிக்கையாளர்களின் மாறிவரும் ரசனைக் கேற்ப இரகங்களை வலுப்படுத்தவும், புதிய இரகங்களின் வடிவமைப்புகளை மேம்படுத்தவும், தேடி வரும் வாடிக்கையாளர்களின் உள்ளார்ந்த ஆசையினை பூர்த்தி செய்யவும், அவர்களின் எண்ணத்திற்கேற்ற வடிவமைப்புகளை அவர்களே வடிவமைத்து, திறன்மிக்க நெசவாளர்களால் நெசவு செய்து வழங்கும் சேலை வடிவமைப்புகளை தாங்களே வடிவமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க விற்பனை மையங்கள் மற்றும் லூம் வேர்ல்டு விற்பனை மையங்களில் செயல்படுத்தப்படும்.

## 21. தூய ஜரிகை பட்டுசேலைகளில் உள்ள ஜரிகையின் தரம் உறுதிபடுத்துவதற்காக "ஜரிகை உத்திரவாத அட்டை" முதன்முறையாக கோ-ஆப்டெக்ஸில் அறிமுகப்படுத்தப்படும்

கோஆப்டெக்ஸ் நிறுவனத்தால் காஞ்சிபுரம் சரகத்தில் இருந்து கொள்முதல் செய்யப்படும் சுத்தப்பட்டு, சுத்த ஜரிகை பட்டுச் சேலைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள ஜரிகையில் உள்ள தங்கம் மற்றும் வெள்ளியின் அளவு சதவீதமானது அரசு நிர்ணயித்துள்ள தர அளவீடுகளின்படி உள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு தெரியப்படுத்துவதன் மூலம், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் வாங்கும் பட்டுச் சேலைகளின் மீது ஆண்டாண்டு காலமாக வாடிக்கையாளர்களுக்கு உள்ள நம்பகத்தன்மையை மேலும் அதிகரிக்கும் வகையில், தமிழ்நாடு ஜரி லிமிடெட் நிறுவனத்தில் பரிசோதனை செய்து தரத்தினை உறுதிபடுத்தி கொண்டு அச்சேலைகளில் மட்டும் "ஜரிகை உத்திரவாத அட்டை" இணைக்கப்படும். மேற்கண்ட ஜரிகை உத்தரவாத அட்டை முதன்முறையாக கோ-ஆப்டெக்ஸில் அறிமுகப்படுத்தப்படும்.



## 22. 300 கைத்தறி நெசவாளர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் திறன் மேம்பாடு பயிற்சி முகாம்கள் நடத்தப்படும்

மாறிவரும் வாடிக்கையாளர் இரசனைக்கேற்ப புதிய ஜவுளி இரகங்கள் உற்பத்தி செய்து அறிமுகப்படுத்த பட்டு சேலைகள், பட்டு பருத்தி சேலைகள், பருத்தி சேலைகள், கைலிகள் மற்றும் வீட்டு உபயோக துணிவகைகள் ஆகிய இரகங்களை நெசவு செய்யும் 300 நெசவாளர்களுக்கு புதிய வடிவங்கள், வண்ணங்கள், நெசவு தொழில்நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வு மற்றும் நெசவு பயிற்சி வழங்கப்படும். இதன் மூலம் நெசவாளர்களின் நெசவுத்திறன் மற்றும் தொழில்நுட்ப அறிவு மேம்படுவதோடு அவர்களின் வருவாய் உயர வழிவகை செய்யப்படும்.

## 23. "இல்லந்தோறும் கோ–ஆப்டெக்ஸ்" என்ற இலக்கினை அடைய ரூபாய் 50 இலட்சம் செலவில் புதிய வடிவமைப்புகளில் இரகங்களை அறிமுகப்படுத்தி விளம்பர பிரச்சாரம் செய்யப்படும்

"இல்லந்தோறும் கோ–ஆப்டெக்ஸ்" என்ற விளம்பர முழக்கம் மூலம் ஒவ்வொரு இல்லத்திலும் குறைந்தபட்சம் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை செய்யும் ஒரு இரகமாவது இருக்கும் பொருட்டும், வாடிக்கையாளர்களிடம் கைத்தறி இரகங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி அதன் மூலம் அவர்களின் துணித் தேவைகளில் கைத்தறித் துணிகளுக்கு முன்னுரிமை அளிக்கவும், ஒரு விளம்பர பிரச்சாரயுக்தி மேற்கொள்ளப்பட இருக்கிறது. ஒவ்வொரு இரகத்தின் உற்பத்தியில் புதிய வடிவமைப்புகள் மற்றும் வண்ணக் கலவைகளை அறிமுகப்படுத்தி அதன்மூலம் 2021–2022–ஆம் ஆண்டில் புதிய வடிவமைப்புகளில் படுக்கைவிரிப்புகள், போர்வைகள், துண்டுகள், லுங்கிகள், வேட்டிகள், குர்த்திஸ் மற்றும் நைட்டி இரகங்களை விளம்பர பிரச்சாரத்துடன் பிரபலப்படுத்த ரூபாய் 50 இலட்சம் மதிப்பில் பணிகள் மேற்கொள்ளப்படும்.



## 24. இயற்கை முறையில் பெறப்பட்ட பருத்தி நூலிழைகள் மூலம் தயார் செய்யப்பட்ட (Organic) குழந்தைகளுக்கான ஆடைகள் அறிமுகப்படுத்தப்படும்

குழந்தைகளின் ஆடைத் தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டும், குறிப்பாக அவர்களின் பாதுகாப்பு, சௌகரியம் ஆகியவற்றை கருத்தில் கொண்டும், இதனுடன் சுற்றுச் சூழலுக்கு சாதகமான அம்சங்களையும் சேர்த்து, 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான ஆர்கானிக் ஆடைகளின் உற்பத்தியை மேம்படுத்தி அதன் மூலம் உயர்ந்த தன்மைகளான சருமத்திற்கு இதம், நல்ல வடிவமைப்புகள், மிருதுத்தன்மை, இலகுவாக உடுத்துதல் மற்றும் எளிதாக தூய்மைபடுத்துதல் ஆகிய அம்சங்களை உறுதி செய்யும் பொருட்டு குழந்தைகளுக்கான ஆர்கானிக் ஆடைகளின் உற்பத்திப் பணிகள் மேற்கொள்ளப்படும். இந்த ஆடைகளை சென்னையில் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் ஐந்து விற்பனை நிலையங்கள் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்படும்.

## 25. சென்னை மயிலாப்பூர் லஸ் பகுதியில் கோ–ஆப்டெக்ஸ் புதிய விற்பனை நிலையம் ரூபாய் 65 இலட்சம் மதிப்பில் கட்டப்படும்

சென்னை மயிலாப்பூர், இராமகிருஷ்ணா ரோடு, லஸ் பகுதியில் உள்ள உறையூர் தேவாங்கா பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான 630 சதுர அடி பரப்பில் உள்ள பழைய கட்டடத்தை கோ–ஆப்டெக்ஸ் 33 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு எடுத்துள்ளது. மேற்கண்ட பழைய கட்டடத்தினை இடித்து, ரூபாய் 65 இலட்சம் மதிப்பில் புதிய கட்டடம் கட்டி நவீனமயமான விற்பனை நிலையம் அமைக்கப்பட உள்ளது.

**ஆர்.காந்தி**

கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்